# பெண்களுக்கு எஸ்.ஓ.எஸ்., ஆப் கார்பன் மொபைல் அறிமுகம்

புதுடில்லி, ஏப். 28—

*கார்பன் மொபைல்ஸ் நிறுவனம், தன் மொபைல் போனில், பெண்கள் பாதுகாப்பிற்காக, தனி ஆப் சேவையை வழங்க உள்ளது.*

*மத்திய அரசு, 'மொபைல் போன் தயாரிப்பில் ஈடுபட்டு உள்ள நிறுவனங்கள், 2017க்குள், ஆபத்து காலங்களில் அழைக்கும் வகையில், பேனிக் பட்டனை மொபைல் போனில் ஏற்படுத்த வேண்டும்' என, உத்தரவிட்டுள்ளது.*

*இந்நிலையில், கார்பன் நிறுவனம், பெண்கள் பாதுகாப்பிற்காக, மொபைல் போனில், எஸ்.ஓ.எஸ்., என்ற, 'ஆப்' வசதியை அறிமுகம் செய்ய முடிவு செய்துள்ளது. இதன் மூலம், அவர்களுக்கு பாதுகாப்பு அளிக்கும் வகையில், சேவை வழங்கப்படும்.*

*இதுகுறித்து, கார்பன் நிறுவன அதிகாரி ஒருவர் கூறுகையில், 'மொபைல் போனில், பல சேவைகள் வழங்கி வருகிறோம். அந்த வகையில், பெண்கள் பாதுகாப்புக்கான இந்த எஸ்.ஓ.எஸ்., ஆப்பை உருவாக்கி இருக்கிறோம். இன்னும் இரண்டு மாதங்களில் அறிமுகப்படுத்த இருக்கிறோம்' என்றார்.*